


தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய காலாண்டு செய்தி இதழ் — இலவசப் பிரதி
மலர் - 4, இதழ் - 3 — ஏப்ரல் - ஜூன் 2010

## திரு. T.B. சிக்கோபா, முன்னாள் உறுப்பினர் / மின்உற்பத்தி அவர்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒரு சகாப்தம் படைத்தவர்



**திரு.** T.B. **சிக்கோபா,** அவர்கள் 1955 ஆம் ஆண்டு இளநிலைப் பொறியாளராக (மின்னியல்), தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியில் சேர்ந்தார். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பல்வேறு பிரிவுகளில் இவர் பணியாற்றியவர். மேற்பார்வைப் பொறியாளர் / திட்டமிடுதலாக இருந்தபோது தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கணினி மையம் இவரால் தொடங்கப்பட்டது. தலைமைப் பொறியாளர் / திட்டமிடுதல் மற்றும் உறுப்பினர் / மின்உற்பத்தியாக இவர் பணியாற்றிய காலங்களில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்உற்பத்தி / மின்செலுத்தல் / மின்பகிர்வு ஆகியவற்றிற்கான திட்டங்களை தெளிவாக மத்திய / மாநில அரசுகளிடமும் மற்றும் திட்டக்குழுவிடமும் திறம்பட எடுத்துரைத்து அதற்கான ஒப்புதல்களைப் பெற்றுத் தந்தவர். 30-6-1992இல் பணி ஓய்வு பெற்ற பின்பு, காற்றாலை மின்உற்பத்தி அமைப்பதில் கலந்தாய்வுரைஞராக இருந்து வந்தார். தமிழகத்தில் காற்றாலை மின்உற்பத்தி வளர்ச்சியடைவதற்கு இவர் ஆற்றிய பணிகள் உளமாரப் பாராட்டத்தக்கதாகும். தமிழ்நாடு காற்றாலை மின்உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பினால் வெளியிடப்படும் மாதாந்திர செய்தி இதழான **"Wind Pro"** இதழின் கவுரவப் பதிப்பாசிரியராகவும் இருந்து வந்தவர்.

2003ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் **மாநில ஆலோசானைக் குழுவின் உறுப்பினராக** இருந்து வந்தவர். ஆணையத்தால் வகுக்கப்பட்ட **ஒழுங்குமுறை விதிகள்** மற்றும் **மின்கட்டணங்களின் மீதான ஆணைகள்** ஆகியவற்றின்பால் அவர் வழங்கிய ஆலோசனைகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மொத்தத்தில் இவர் **ஒரு மனித நேயர்**. 2010 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 2 ஆம் நாளன்று இயற்கை எய்தினார் என்பது எதிர்பாராத ஒன்றாகும். அவருடைய மறைவு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் குறிப்பாக மின் நுகர்வோருக்கும் **ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்**.



## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் செயலாளர் பணி ஓய்வு பெற்றார்

**திரு. இரா. பாலசுப்ரமணியன்** அவர்கள் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் செயலாளர் பதவியிலிருந்து 04-04-2010 அன்று பணி ஓய்வு பெற்றார். இவர் நவம்பர் 1999 லிருந்து ஆணையத்தின் செயலாளராகப் பணியாற்றி வந்தார். **தமிழ்நாடு மாநில மின்சார குறைதீர்ப்பாளராக** 14.06.2005 லிருந்து 12.06.2006 வரையிலும் பிறகு 06.07.2007 லிருந்து 04-04-2010 வரையிலும் செயல்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான அரசின் மானியத் தொகை ரூ. 1,652.43 கோடி

2010-11ஆம் நிதியாண்டிற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அரசால் வழங்கப்பட வேண்டிய மானியம் **ரூ.1,652.43** கோடி என தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயம் செய்துள்ளது.

வீட்டு மின்உபயோகிப்பாளர்களுக்கு மின்கட்டண வீதத்தில் ஒரு பகுதி அதாவது, ஒரு யூனிட்டிற்கு 35 காசுகள் முதல் **ரூ. 1.75** வரை **உதவித்தொகை** அளித்து வரப்பட்டு உள்ளது. குடிசைவாசிகள் மற்றும் விவசாயிகளுக்கு முழுவதுமாக மானியம் அளிக்கப்பட்டுள்ளது. மொத்த மானியத் தொகையான **ரூ.1,652.43** கோடியில் 75 விழுக்காடான **ரூ.1249/-** கோடி வீட்டு மின் உபயோகிப்பாளர்களுக்கானது. 13 விழுக்காடான **ரூ.219/-** கோடி விவசாய மின்உபயோகிப்பாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 11 விழுக்காட்டுத் தொகையான **ரூ.184/-** கோடி குடிசை மின்உபயோகத்திற்காகவும், விசைத்தறி மற்றும் கைத்தறி, தெருவிளக்குகள் மற்றும் பொது குடிநீர் வழங்கல், பொது வழிபாட்டிடங்கள் ஆகியவற்றின் மின்உபயோகத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்"**
**உள்ளத் தனையது உயர்வு. - குறள் 595**

தண்ணீர் மட்டத்தின் அளவுக்குத்தான் தாமரை மலரின் தண்டு நீளும். அதைப்போல் மக்களுடைய ஊக்கத்தின் அளவுக்குத்தான் அவர்களுடைய வாழ்க்கைச் சிறப்புக்கள் உயரும். **- பதவுரை**

## தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்கட்டணம் மாற்றியமைப்பதின் மீதான மனு
## (TNEB'S TARIFF REVISION PETITION)

தமிழ்நாடு மின்சார வாரியம் 01-04-2010 முதல் மின்கட்டண வீதத்தை மாற்றியமைக்கக் கோரி, **பல்லாண்டுக்கான மின்கட்டண வீதத்தின்படி (Multi Year Tariff),** 2010-11 முதல் 2012-13 வரையிலான நிதியாண்டுகளுக்கான **மொத்த வருவாய்த் தேவை (Aggregate Revenue Requirement)** மற்றும் **மின்கட்டணங்களிலிருந்து எதிர்ப்பார்க்கப்படும் வருவாய்** ஆகியவற்றுடன் சேர்த்து மின்கட்டணத்தை மாற்றியமைப்பதற்கான மனுவினை 18-01-2010 அன்று ஆணையத்திடம் சமர்ப்பித்தது. அந்த மனு ஆணையத்தால் ஏற்கப்பட்டு. மின்கட்டண மனு (Tariff Petition) **எண்.1/2010** ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள (i) ஆண்டு வருவாய்த் தேவை, (ii) நிகர வருவாய்த் தேவை மற்றும் (iii) தற்போதுள்ள மற்றும் உத்தேசிக்கப்பட்ட மின்கட்டணத்தைக் காட்டும் விவர அறிக்கை ஆகியவற்றின் சுருக்கங்களை ஆணையத்தின் இணைய தளமான **www.tnerc.gov.in** மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இணைய தளமான **www.tneb.in** னிலும் பார்வையிடலாம்.

2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் **64ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்படி,** உரிமம்தாரரால் (தமிழ்நாடு மின்சார வாரியம்), சமர்ப்பிக்கப்படும் மின்கட்டணத்தை மாற்றியமைக்கக் கோரும் மனுவின் மீது, பொது மக்களின் ஆலோசனைகளும் மற்றும் மறுப்புரைகளும் கிடைக்கப்பெற்ற பின்பும் மேலும் மனு சமர்ப்பிக்கப்பட்ட **120 நாட்களுக்குள்ளும்** அதன் மீதான மின்கட்டண வீத ஆணையை ஆணையம் பிறப்பித்தல் வேண்டும்.

இதன் முதற்கட்டமாக, மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் தங்களது அனுபவம் சார்ந்த ஆலோசனைகளையும். கருத்துக்களையும் அளிப்பதற்கு ஏதுவாக, 11-03-2010 அன்று மாநில ஆலோசனைக் குழுவின் கூட்டமும், 30-03-2010 அன்று பொதுமக்கள் கருத்துக்கேட்பும் **சென்னையில்** ஆணையத்தால் நடத்தப்பட்டது.



இத்தகைய பொது மக்கள் கருத்துக் கேட்பை **மதுரையில்** 8-4-2010 அன்றும், **கோயம்புத்தூரில்** 13-4-2010 அன்றும் மற்றும் **திருச்சியில்** 15-4-2010 அன்றும் நடத்திய பிறகு, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்கட்டண வீதத்தை மாற்றியமைக்கக்கோரும் மனுவின் மீதான மின்கட்டண ஆணையை ஆணையம் விரைவில் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியம் கடைசியாக 25-09-2002 அன்று மின்கட்டண வீதத்தை மாற்றியமைக்கக் கோரி ஆணையத்திடம் மனுவை சமர்ப்பித்தது. இதன் மீதான மின்கட்டண வீத ஆணையை, 15-03-2003 அன்று ஆணையம் பிறப்பித்தது, தமிழ்நாட்டில் நடப்பிலிருக்கும் மின்கட்டண வீதம் ஆணையத்தினால் 15-03-2003 அன்று நிர்ணயிக்கப் பட்டதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### மின்கட்டணத்தை அஞ்சலகத்திலும் செலுத்தலாம்

சென்னை, அண்ணா நகரில் உள்ள அஞ்சலகத்தில் மின்கட்டணம் செலுத்தும் வசதியானது, 01-03-2010 அன்று **நிதித்துறை முதன்மை செயலர் திரு. கே. ஞானதேசிகன்** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் **திரு. சி.பி.சிங்** அவர்கள் பேசுகையில், "எங்களுக்கு 2 கோடியே 7 லட்சம் வாடிக்கையாளர்கள் உள்ளனர். இவர்களில் 26.5 லட்சம் பேர் குறைந்தபட்ச மின்தொகை செலுத்துபவர்கள். கணினி மயமாக்கப்பட்ட எங்களது 2,264 கிளைகளில், இணையதளம் மூலம் கட்டணம் செலுத்தும் வசதி உள்ளது. **இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஐசிஐசிஐ வங்கி, சிட்டி யூனியன் வங்கி, ஆக்ஸிஸ் வங்கி** ஆகியவற்றிலும் மின்கட்டணம் செலுத்தலாம். விரைவில் **கனரா வங்கியுடன் இணைந்து,** எனிடைம் பேமென்ட் **(Anytime Payment)** மூலம் ஏப்ரல் 1ஆம் தேதி முதல் 24 மணி நேரமும் மின்கட்டணம் செலுத்தும் வசதி அறிமுகப்படுத்தப்படும்" என்றார்.

---

The **Ministry of New and Renewable Energy** has announced a generation based incentive of **Rs.0.50 per unit** to **grid-connected wind power projects.** The incentive is for a minimum of four years and a maximum of 10 years and has a cap of **Rs. 6.2 million per MW**. Captive wind power producers will also be able to avail of the incentive. The subsidies will be applicable to projects **upto 4,000 MW**. The incentive scheme will be implemented by the Indian Renewable Energy Development Agency. **(Power Line-January'2010)**

# IN THE COURT HALL OF THE COMMISSION

**1) Petition for non-compliance dismissed.**

The petition filed by **Tamil Nadu Spinning Mills Association** for punishing TNEB for non-compliance of Commission's Order dated 28-11-2008 in **MP No. 42 of 2008** was dismissed in view of the fact that the petition was filed after five months after the expiry of stay granted by the High Court of Madras and no purpose would be served at that stage in initiating contempt proceedings. **(MP No. 19 of 2009 filed by Tamil Nadu Spinning Mills Association against TNEB)**

**2) Chennai Petroleum Corporation Ltd (CPCL) succeeds in its claim before the Commission**

In a case where a **Power Purchase Agreement (PPA)** was executed between **CPCL** and **TNEB** in the year 1999 and the rate fixed at **Rs.2.25 per unit** with escalation of 5% every year upto 2007-2008 which worked out to **Rs. 3.16 per unit, Rs. 3.32 per unit** and **Rs. 3.49 per unit** for the years 2005-06, 2006-07 and 2007-2008 and TNEB paid the same at a flat rate of **Rs. 3.01 per unit** which gave rise to the petition before the Commission, the Commission rejected the pleas of limitation, acquiescence raised by TNEB and upheld the claim of CPCL with interest at **14%** per annum. **(Order dated 25-02-2010 in DRP No. 27 of 2009 filed by Chennai Petroleum Corporation Ltd against TNEB)**

**3) Proceedings void ab initio - Commission.**

In a case where **TNEB** and **Sun Paper Mills** agreed to an **adhoc rate** of **Rs. 3.01 per KWhr** through negotiations effective for a period of **three years** from 1-4-2008 and approached the Commission for approval of the same, Commission held such exercise as **void ab initio** and set aside the same. However, the Commission adopting a formula which provides for 5% escalation every year beginning with 1999, fixed rates at **Rs.3.66 per unit**, **Rs. 3.85 per unit** and **Rs.4.04 per unit for** the years 2008-2009, 2009-2010 and 2010-2011 respectively. **(Order dated 25-2-2010 in PPAP No. 3 of 2009 filed by TNEB in the matter of M/s Sun Paper Mills Ltd)**

**4) Commission says "NO" to retrospective approval for tariff**

Holding that the mandatory requirement in regard to prior publication and consultation as laid down in **Section 64 of Electricity Act 2003** would be reduced to nullify if the Commission is called upon to determine tariff **expost facto,** Commission held that the act of TNEB in seeking approval of rate of **Rs.6.70 per unit** for the purchase of energy from **M/s Arkay Energy Rameswaram Ltd** runs counter to the provisions of the Electricity Act of 2003. **(PPAP No. 5 of 2009 filed by TNEB in the matter of M/s Arkay Energy Rameswaram Ltd)**

---

## மின்நுகர்வோருக்கான கருத்தரங்கு







2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் கீழ் "நுகர்வோர் நலன் பாதுகாப்பு" பற்றிய கருத்தரங்குகளை ஆணையம் ஏற்கெனவே வேலூர், மதுரை மற்றும் திருச்சி மின் பகிர்வு மண்டலங்களிலுள்ள மின்துறை அலுவலர்களும், நுகர்வோர் குழுமங்களும், நுகர்வோருக்காகச் செயலாற்றுபவர்களும், அரசு சாரா நிறுவனங்களும் பயனடையும் வகையில் நடத்தியுள்ளது. இதன் தொடர்ச்சியாக. இத்தகைய கருத்தரங்கை **கோயம்புத்தூர் மின்பகிர்வு மண்டலத்தில் 26-02-2010** அன்றும், **திருநெல்வேலி மின்பகிர்வு மண்டலத்தில் 20-03-2010** அன்றும் ஆணையம் சிறப்பாக நடத்தியது, மின்நுகர்வோர்கள் மற்றும் பத்திரிக்கைத் துறை மத்தியில் இந்த கருத்தரங்கு நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை ஆணையம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது.

The **Gujarat Electricity Regulatory Commission** has raised wind power tariffs by **5.63 percent** to **Rs 3.56 per unit** from **Rs 3.37 per unit**. The tariff will remain constant for a period of **25 years** and is applicable to wind power projects commissioned in Gujarat during a period of three years starting **August 11, 2009.** **(Power Line-February '2010)**

## ஜவஹர்லால் நேரு தேசிய சூரிய சக்தி திட்டம்
## (JAWAHARLAL NEHRU NATIONAL SOLAR MISSION)




நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட **"ஜவஹர்லால் நேரு தேசிய சூரிய சக்தி திட்டம்"**, 11-01-2010 அன்று புதுதில்லியிலுள்ள விக்யான் பவனில் **பாரதப் பிரதமர் டாக்டர் திரு. மன்மோகன்சிங்** அவர்களால் **"சூரிய சக்தி இந்தியா" (Solar India)** என்ற பெயரில் தொடங்கி வைக்கப்பட்டது. மின் உற்பத்திக்காக சூரிய சக்தியைப் பயன்படுத்துதல் மற்றும் அத்தகைய மின்சாரத்தை மின்கட்டமைப்பில் செலுத்தாமல் மற்ற பிற உபயோகத்திற்காகப் பயன்படுத்துதல் போன்ற நோக்கங்களை ஊக்குவித்து வளர்ச்சியடையச் செய்வதை கொள்கையாகக் கொண்ட இத்திட்டம், எட்டு திட்டங்கள் உள்ளடங்கிய "சீதோஷ்ணநிலை மாற்றம் மீதான தேசிய செயல் திட்டத்தால் **(National Action Plan on Climate Change)** கோடிட்டுக் காட்டப்பட்ட ஒரு திட்டமாகும்.

திட்டச் செலவினத்தை குறைப்பதற்கு துரிதமான வளர்ச்சியைக் காணும் நோக்கத்தோடு, 2022,ஆம் ஆண்டுடன் முடியும் 13வது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள், **20,000 மெகாவாட் திறன்** கொண்ட சூரியசக்தி மின்திட்டத்தை, கீழ்காணும் மூன்று காலக் கட்டங்களில் செயல்முறைப்படுத்தும் அணுகுமுறையைக் கொண்ட திட்டமும் ஆகும்.

| பயனுறும் பகுதி | இலக்கு கட்டம் -1 (2010- 13) | இலக்கு கட்டம் -2 (2010- 17) | இலக்கு கட்டம் -3 (2010- 22) |
|---|---|---|---|
| மின்கட்டமைப்பில் அல்லாத பயன்பாடு | 200 மெகா வாட் | 1,000 மெகா வாட் | 2,000 மெகா வாட் |
| மின்கட்டமைப்பு கொண்ட பயன்பாடு மற்றும் குடியிருப்புக்கான பயன்பாடு | 1000-2000 மெகா வாட் | 4,000-10,000 மெகா வாட் | 20,000 மெகா வாட் |

புதுப்பிக்கத் தக்க ஆதாரங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் ஒரு குறிப்பிட்ட அளவை மின்துறை நிறுவனங்கள் கொள்முதல் செய்வது சட்டப்படியான கடமை **(Renewable Purchase Obligation)** என்பது சூரிய சக்தி மின்உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு ஒரு முக்கிய தூண்டுதலாக இருக்குமென கருதப்படுகிறது. புதிய மற்றும் புதுப்பிக்கத் தக்க ஆதார அமைச்சகத்தின் **(Ministry of New and Renewable Energy)** நடப்பிலுள்ள கிராமப்புறங்களை மின்மயமாக்குதல் திட்டத்தின் மூலம் சுமார் 1000 கிராமங்களை சூரிய சக்தி மின்உற்பத்தி மூலம் மின்மயமாக்க ஜவஹர்லால் நேரு தேசிய சூரிய சக்தி திட்டத்தில் திட்டமிடப்படுள்ளது. தனியார் துறை நிறுவனங்கள் இத்தகைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாக இந்திய புதுப்பிக்கத் தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமையின் **(Indian Renewable Energy Development Agency)** மூலமாக சுலபமாக மறு நிதியுதவிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசாங்கம், இந்திய புதுப்பிக்கத் தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு தேவையான நிதியுதவி ஆதரவை அளிக்கும்.

ஜவஹர்லால் நேரு தேசிய சூரிய சக்தி மின்உற்பத்தி திட்ட கொள்கையின்படி, தேசிய அனல் மின் உற்பத்தி கழகத்தின் **(National Thermal Power Corporation)** மின் வர்த்தக நிறுவனமான **Viduyt Vyapar Nigam (NVVN)** எனும் அமைப்பு தற்போது சூரிய சக்தி மின்உற்பத்தியை விலை கொடுத்து வாங்குவதற்கும் அதை மாநில அரசுகளுக்கு விற்பதற்கும் மத்திய அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான மின்கட்டண வீதத்தையும், மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்கான கால அளவையும் மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயிக்கும். சூரிய சக்தி மின்உற்பத்தியில் முதலீடு செய்ய விரும்புவோர்க்கு ஒரு நல்ல எதிர்காலம் இருக்குமென கருதப்படுகிறது.

### CERC NOTIFIES REGULATIONS ON RENEWABLE ENERGY CERTIFICATES (RECS)

The **Central Electricity Regulatory Commission (CERC)** has notified regulations on **Renewable Energy Certificates (RECs).** According to the new norms, the regulator will designate a central agency for issuing RECs to renewable energy generators participating in the scheme. The distribution companies, open access consumers and captive power plants will have the option of purchasing RECs to meet their renewable purchase obligations. The value of an REC will be equal to **1 MW** of electricity contributed to the grid from renewable energy sources. These certificates can be exchanged at the power exchanges within a price band that will be determined by the CERC.

**(Power Line-February'2010)**

### CERC DESIGNATES NLDC AS THE CENTRAL AGENCY FOR REC TRANSACTIONS

The Central Electricity Regulatory Commission (CERC) has designated the National Load Despatch Centre (NLDC) as the central agency under the Renewable Energy Cenrtificate (REC) Regulations. NLDC will be responsible for the registration of eligible REC accounts, as well as maintenance of the repository of REC transactions.

**(Power Line - March '2010)**

The Central Electricity Regulatory Commission (CERC) has issued regulations for fixing of **trading margins for interstate trading of power.**

# UNAUTHORISED USE OF ELECTRICITY
## (INVESTIGATION AND ENFORCEMENT)



**Section 126 & 127 of the Electricity Act, 2003,** deals with the provisions for investigation and enforcement in cases of unauthorised use of electricity. These two provisions shall be applied appropriately to achieve the result intended in the Act.

In the last edition of this newsletter, the explanation for the unauthorised use of electricity was discussed. This edition will throw light on how **Sections 126 & 127 of Electricity Act, 2003** deals with the provisions for investigation and enforcement.

1) **Under what circumstances the assessing officer concludes that any person is indulging in unauthorised use of electricity and how he assess the provisional assessment?**

❖ As per **sub section (1) of Section 126** of the Electricity Act, 2003, if on an inspection of any place or premises or after inspection of the equipments, gadgets, machines, devices found connected or used, or after inspection of records maintained by any person, the assessing officer comes to the conclusion that such person is indulging in unauthorised use of electricity, he shall **provisionally assess to the best of his judgement** the electricity charges payable by such person or by any other person benefited by such use.

2) **Who is prescribed by the State Government as the assessing officer for the assessment of charges for the unauthorised use of electricity?**

❖ The **Assistant Executive Engineer** in charge of the distribution area concerned of the Tamil Nadu Electricity Board has been prescribed by the State Government vide **G.O.M.S.No.118 dated 27.11.2006 (Notification-I)** as the assessing officer for the assessment charges for the unauthorised use of electricity for **low tension**, **high tension** and **extra high tension services** including **temporary supply**.

3) **Whether the person on whom the provisional order has been served shall be entitled to file objections, if any?**

# அங்கீகாரமற்ற மின்சாரப் பயன்பாடு
## (புலனாய்வு மற்றும் அமலாக்கம்)

**2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 126 மற்றும் 127 பிரிவுகள்,** அங்கீகாரமற்ற மின்ாசரப் பயன்பாடு பொறுத்த வழக்குகளில் புலனாய்வு மற்றும் அமலாக்கம் வகைமுறைகளைப் பற்றி கூறுகிறது. இந்த இரண்டு வகைமுறைகளையும் உரியமுறையில் பொருந்தச் செய்து, இந்தச் சட்டத்தில் கருதப்பட்ட நோக்கை அடைய வேண்டும்.

இந்த மாதந்திர செய்தி இதழின் கடைசி பதிப்பில், அங்கீகாரமற்ற மின்சாரப் பயன்பாட்டிற்கான விளக்கம் பற்றி விவாதிக்கப்பட்டது. இந்தப் பதிப்பில், **2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 126 மற்றும் 127 ஆம் பிரிவுகள்** புலனாய்வு மற்றும் அமலாக்கம் வகைமுறைகளை எவ்வாறு கையாள்கிறது என்பதை விளக்குகிறது.

1) **நபர் எவரும் அங்கீகாரமற்ற முறையில் மின்சாரத்தைப் பயன்படுத்தி வருகிறார் என்று எத்தகைய சூழ்நிலைகளின் பேரில் மதிப்பீட்டு அலுவலர் முடிவு செய்து எவ்வாறு தற்காலிகமாக மதிப்பீடு செய்கிறார்?**

❖ 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் **126ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி**, எந்த இடத்தை அல்லது வளாகத்தை ஆய்வு செய்த பிறகோ அல்லது இணைக்கப்பட்ட அல்லது பயன்பாட்டிலுள்ள சாதனங்கள், சிறுபொறியமைப்பு, எந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றை ஆய்வு செய்தபிறகோ அல்லது நபர் எவராலும் வைத்துவரப்படும் ஆவணங்களை ஆய்வு செய்தபிறகோ, மதிப்பீட்டு அலுவலர் அத்தகைய நபர் அங்கீகாரமற்ற முறையில் மின்சாரத்தைப் பயன்படுத்தி வருகின்றார் என்ற முடிவுக்கு வருவாரானால், அத்தகைய நபரால் அல்லது அத்தகைய உபயோகத்தினால் பயனடைந்த பிறநபர் எவராலும் செலுத்தப்பட வேண்டிய மின் கட்டணங்களை அவ்வலுவலர் அவரது நல்ல தீர்வுக்கு ஏற்ப தற்காலிகமாக மதிப்பீடு செய்தல் வேண்டும்.

2) **அங்கீகாரமற்ற மின்சாரப் பயன்பாட்டிற்கான கட்டணங்களை மதிப்பிட மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படும் மதிப்பீட்டு அலுவலர் யார்?**

❖ **27-11-2006 தேதியிட்ட அரசு ஆணை எண்.118-இல் (குறிப்பாணை-I),** தற்காலிக மின் வழங்கல் அடங்கிய தாழ் அழுத்த, உயரழுத்த மற்றும் அதி உயரழுத்த மின்னிணைப்பு களுக்கான அங்கீகாரமற்ற மின்சாரப் பயன்பாட்டிற்கான கட்டணங்களை மதிப்பிட தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சார்ந்த மின்பகிர்வு உரிமப் பகுதிக்கு பொறுப்பிலுள்ள **உதவி செயற் பொறியாளரை** மதிப்பீட்டு அலுவலராக மாநில அரசாங்கம் வகுத்துரைத்துள்ளது.

3) **தற்காலிக மதிப்பீட்டு ஆணை சார்வு செய்யப்பட்ட நபர், அதை எதிர்த்து மறுப்புக்களை தாக்கல் செய்ய உரிமையுடையவராவாரா?**

❖ ஆம், அவர் உரிமையுடையவராவார். **சட்டத்தின் 126ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி,** தற்காலிக மதிப்பீட்டு ஆணை சார்வு செய்யப்பட்ட அந்த நபர், அதை எதிர்த்து மதிப்பீட்டு அலுவலரிடம் **மறுப்புகள் எதையும் தாக்கல் செய்ய** உரிமையுடையவராவார்.

4) **மதிப்பீட்டு அலுவலரால் வழங்கப்பட்ட தற்காலிக மதிப்பீட்டின் மீதான இறுதி ஆணை பிறப்பிக்கப்படும் கால அளவு எவ்வளவு?**

- ❖ Yes, he is entitled. As per **sub section (3) of Section 126** of the Electricity Act, 2003, the person, on whom an order has been served shall be entitled to **file objections, if any,** against the provisional assessment before the assessing officer.

**4) What is the time limit to pass the final order of assessment on the order of provisional assessment by the assessing officer?**

- ❖ As per **sub section (3) of Section 126** of the Electricity Act, 2003, the assessing officer after affording a reasonable opportunity of hearing to such person, pass a final order of assessment within **thirty days** from the date of service of such order of provisional assessment of the electricity charges payable by such person.

**5) What is the time limit for depositing the assessed amount by the person on whom the provisional assessment order is served?**

- ❖ As per **sub section (4) of Section 126** of the Electricity Act, 2003, any person served with the order of provisional assessment, may, accept such assessment and deposit the assessed amount with the licensee **within seven days** of service of such provisional assessment order upon him.

**6) If the assessing officer reaches to the conclusion that unauthorised use of electricity has taken place, how such assessment period is ascertained?**

- ❖ As per **sub section (5) of Section 126** of the Electricity Act, 2003, if the assessing officer reaches to the conclusion that unauthorised use of electricity has taken place, the assessment shall be made for the **entire period** during which such unauthorised use of electricity has taken place and if, however, the period during which such unauthorised use of electricity has taken place cannot be ascertained, such period shall be **limited to a period of twelve months immediately preceding the date of inspection**.

**7) How much is the rate of assessment for the unauthorised use of electricity?**

- ❖ As per **sub section (6) of Section 126** of the Electricity Act, 2003, the assessment shall be made at a rate **equal to twice the tariff rates** applicable for the relevant category of services specified in sub-section (5).

**8) What is the time limit for preferring an appeal by any person aggrieved by the final order made under sub section (3) of Section 126 of the Electricity Act, 2003?**

- ❖ As per **sub section (1) of Section 127** of the Electricity Act, 2003, any person aggrieved by the final order made under **sub section (3) of Section 126** may, **within thirty days** of the said order, prefer an appeal in such form, verified in such manner and be accompanied by such fee as may be specified by the State Commission, to an appellate authority as may be prescribed by the State Government.

- ❖ **சட்டத்தின் 126ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்படி,** மதிப்பீட்டு அலுவலரிடம் தாக்கல் செய்யப்பட்ட தற்காலிக மதிப்பீட்டின் மீதான மறுப்புக்களை கேட்கப்படுவதற்கான காரணமுறைமைக்கியந்த வாய்ப்பை அத்தகைய நபருக்கு நல்கிய பிறகு, அத்தகைய நபரால் செலுத்தப்பட வேண்டிய மின்கட்டணங்களுக்கான தற்காலிக மதிப்பீட்டு ஆணை சார்வு செய்யப்பட்ட 30 நாட்களுக்குள் இறுதியான மதிப்பீட்டு ஆணை பிறப்பிக்கப்படுதல் வேண்டும்.

**5) தற்காலிக மதிப்பீட்டு ஆணை சார்வு செய்யப்பட்ட நபர், அந்த தொகையை வைப்பீடு செய்ய வேண்டிய கால அளவு எவ்வளவு?**

- ❖ **சட்டத்தின 126ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி,** தற்காலிக மதிப்பீட்டு ஆணை சார்வு செய்யப்பட்ட எந்த நபரும், அத்தகைய மதிப்பீட்டை ஏற்கவும் மற்றும் அந்த மதிப்பீட்டுத் தொகையை உரிமம்தாரரிடம் அத்தகைய தற்காலிக மதிப்பீட்டு ஆணை அவர் மீது சார்வு செய்யப்பட்ட **7 நாட்களுக்குள்** வைப்பீடும் செய்யலாம்.

**6) அங்கீகாரமற்ற மின்சாரப் பயன்பாடு நடந்ததாக மதிப்பீட்டு அலுவலர் முடிவுக்கு வருவாரானால், அத்தகைய அங்கீகாரமற்ற மின்சாரப் பயன்பாட்டின் கால அளவு எவ்வாறு உறுதி செய்யப்படுகிறது?**

- ❖ **சட்டத்தின் 126ஆம் பிரிவின் (5)ஆம் உட்பிரிவின்படி,** அங்கீகாரமற்ற மின்சாரப் பயன்பாடு நடந்ததாக மதிப்பீட்டு அலுவலர் முடிவுக்கு வருவாரேயானால், அத்தகைய அங்கீகாரமற்ற மின்சாரப் பயன்பாடு நடந்த **முழுமையான கால அளவிற்கு** மதிப்பீடு செய்தல் வேண்டும், மற்றும் **இருந்த போதிலும்** அத்தகைய அங்கீகாரமற்ற மின்சாரப் பயன்பாடு நடந்த காலத்தைக்கண்டறிய முடியவில்லையெனில், அத்தகைய கால அளவு **ஆய்வு தேதிக்கு முந்தைய பன்னிரெண்டு மாத கால அளவுக்கு வரம்பிடப்படுதல்** வேண்டும்.

**7) அங்கீகாரமற்ற மின்சாரப் பயன்பாட்டிற்கான மதிப்பீட்டு வீதம் எவ்வளவாக இருக்கும்?**

- ❖ **சட்டத்தின் 126ஆம் பிரிவின் (6)ஆம் உட்பிரிவின்படி,** அங்கீகாரமற்ற மின்சாரப் பயன்பாட்டிற்கான மதிப்பீடு, **(5)ஆம் உட்பிரிவில்** குறிப்பிடப்படும் அந்தந்த மின்னிணைப்பு வகைகளுக்கு பொருந்தக் கூடிய மின்கட்டண வீதத்தின் **இரண்டு மடங்குக்குச் சமமான வீதத்தில்** செய்யப்படுதல் வேண்டும்.

**8) சட்டத்தின் 126ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட இறுதி ஆணையினால் குறையுற்ற எந்த நபரும் மேல்முறையீட்டை செய்ய விரும்பும் கால அளவு எவ்வளவு?**

- ❖ **சட்டத்தின் 127ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்படி,** 126ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ் பிறப்பிக்கப்பட்ட இறுதி ஆணையினால் குறையுற்ற நபர் எவரும் மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப் படலாகும் ஒரு மேல்முறையீட்டு **அதிகாரியிடம், மாநில ஆணையத்தால் குறித்துரைக்கப்படலாகும்** அத்தகையப்படிவத்தில், அத்தகைய முறையில் சரிபார்ப்பு செய்த பின்பு அத்தகையக் கட்டணத்துடன் சேர்த்து மேற்சொன்ன ஆணை பிறப்பிக்கப்பட்ட **30 நாட்களுக்குள்** மேல்முறையீட்டை தாக்கல் செய்ய விரும்பலாம்.

**9) Who are the Appellate Authorities prescribed by the State Government for hearing the appeal petition preferred by the aggrieved person against the final order of the assessing officer?**

❖ The officers indicated below are prescribed by the State Government vide **G.O.M.S.No.119 dated 27.11.2006** as appellate authorities against the final order of the assessing officer.

| Nature of Electricity | Officer |
|---|---|
| 1) Low tension supply including temporary supply | Executive Engineer of State Transmission Utility / Wing |
| 2) High tension and extrahigh tension services including temporarysupply | Superintending Engineer of State Transmission Utility / Wing |

**10) In which shape the appeal petition shall be entertained?**

❖ As per **sub section (2) of Section 127** of the Electricity Act, 2003, no appeal against an order of assessment under sub-section (1) shall be entertained unless an amount equal to **half of the assessed amount** is deposited in **cash or by way of bank draft** with the licensee and **documentary evidence** of such deposit has been enclosed along with the appeal.

**11) Whether the order of the appellate authority referred to in sub section (1) passed under sub section (3) of Section 127 is final?**

❖ Yes. As per **sub section (4) of Section 127** of the Electricity Act, 2003, the order of the appellate authority referred to in sub-section (1) passed under sub-section (3) shall be final.

**12) Whether any appeal shall lie to the appellate authority against the final order made with the consent of the parties?**

❖ No. As per **sub section (5) of Section 127** of the Electricity Act, 2003, no appeal shall lie to the appellate authority referred to in sub-section (1) against the final order made with the consent of the parties.

**13) Whether the person is liable to pay additional amount incase of defaults in making payment of assessed amount?**

❖ Yes. As per **sub section (6) of Section 127** of the Electricity Act, 2003, when a person defaults in making payment of assessed amount, he, in addition to the assessed amount shall be liable to pay, on the **expiry of thirty days** from the date of order of assessment, **an amount of interest at the rate of sixteen per cent, per annum compounded every six months.**

**9) மதிப்பீட்டு அலுவலரின் இறுதி ஆணையினால் குறையுற்ற நபரின் மேல்முறையீட்டு மனுவை கேட்பதற்காக மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப் படும் மேல்முறையீட்டு அலுவலர்கள் யாவர்?**

❖ **27-11-2006 தேதியிட்ட அரசு ஆணை எண்.119-இல்,** மதிப்பீட்டு அலுவலரின் இறுதி ஆணையினால் குறையுற்ற நபரின் மேல்முறையீட்டு மனுவை கேட்பதற்காக மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப் படும் மேல்முறையீட்டு அலுவலர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| மின்சாரத்தின் தன்மை | அலுவலர் |
|---|---|
| 1. தற்காலிக மின்னிணைப்பு அடங்கிய தாழ் அழுத்த மின்னிணைப்பு | மாநில மின் செலுத்தல் நிறுவனத்தின் / பிரிவின் செயற் பொறியாளர் |
| 2. தற்காலிக மின்னினைப்பு அடங்கிய உயரழுத்த மற்றும் அதி உயரழுத்த மின்னிணைப்பு | மாநில மின் செலுத்தல் நிறுவனத்தின் / பிரிவின் மேற்பார்வைப் பொறியாளர் |

**10) மேல்முறையீட்டு மனு எவ்வாறு இருந்தால் ஏற்றுக் கொள்ளப்படும்?**

❖ **சட்டத்தின் 127ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்படி,** மதிப்பீடு செய்யப்பட்டத் தொகையில் பாதித் தொகையை **பணமாகவோ அல்லது வங்கி வரைவோலை** வாயிலாகவோ உரிமம்தாரரிடம் வைப்பீடு செய்தும் மற்றும் அத்தகைய வைப்பீடு செய்ததற்கான ஆவணச் சான்று மேல்முறையீட்டு மனுவுடன் சேர்த்து இணைக்கப்பட்டிருந்தாலொழிய, சட்டத்தின் 127ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்படும் மதிப்பீட்டு ஆணைக்கு எதிரான மேல்முறையீடு எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**11) சட்டத்தின் 127ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் சுட்டிக் காட்டியுள்ள மேல்முறையீட்டு அதிகாரியின் தீர்ப்பு இறுதியானதா?**

❖ ஆம், **சட்டத்தின் 127ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின்படி,** உட்பிரிவு (1)இல் சுட்டிக் காட்டியுள்ள மேல்முறையீட்டு அதிகாரியினால் உட்பிரிவு (3)இன் கீழ் பிறப்பிக்கப்படும் ஆணை இறுதியானதாகும்.

**12) தரப்பினர்களின் சம்மதத்திற்குப் பிறகு மேல்முறையீட்டு அதிகாரியால் பிறப்பிக்கப்படும் இறுதி தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் செய்ய உரிமை உண்டா?**

❖ உரிமை இல்லை. சட்டத்தின் 127ஆம் பிரிவின் (5)ஆம் உட்பிரிவின்படி, தரப்பினர்களின் சம்மதத்துடன் பிறப்பிக்கப்பட்ட இறுதி ஆணைக்கு எதிராக, (1) ஆம் உட்பிரிவில் சுட்டிக் காட்டியுள்ள மேல்முறையீட்டு அதிகாரியிடம் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்ய உரிமை எதுவும் இல்லை.

**13) மதிப்பீட்டுத் தொகையை செலுத்தத் தவறும்போது அந்த நபர் கூடுதலானத் தொகையை சேர்த்து செலுத்த கடப்பாடுடையவராவாரா?**

❖ ஆம். சட்டத்தின் 127ஆம் பிரிவின் (6)ஆம் உட்பிரிவின்படி, மதிப்பீட்டு ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து **30 நாட்கள் முடிவடைந்த நிலையில்** மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்த தவறும் நபர், மதிப்பீட்டுத் தொகையுடன் சேர்த்து, **ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும் கூட்டு வட்டியாக வருடத்திற்கு 16 சதவீத வட்டியுடன் கூடியத் தொகையையும் சேர்த்து செலுத்தக் கடப்பாடுடையவராவர்.**

## SUPREME COURT AND OTHER HIGH COURT CASES



1. In **Tagore Public School, Ludhiana** Vs **PSEB,** the **Punjab** and **Haryana High Courts** held that section 26(6) of the Indian Electricity Act 1910 limits the liability of a consumer only for a period six months. The court also held that Currrent Transformer is a meter within the meaning of Section 20 of the Indian Electricity Act 1910 and the defect in current transformer is to be understood as a defect in electricity meter.(AIR 2010 P&H 22)

2. **In Anshuman Behera** Vs **Orissa State Financial Corporation and others, (AIR 2010 Orissa 10),** the **Orissa High Court** held that in cases where the property was sold in auction by a State Financial Corporation under Section 29 of the State Financial Corporations' Act 1951, unless it can be shown that there is a charge on the property, the purchaser of a premise cannot be held responsible for payment of outstanding dues in respect of electricity connection of the earlier occupier. This brings out the position that a State Electricity Board cannot recover the dues unless there is a charge on the property in cases relating to sale of property in auction under **SFCs Act 1951.**

## ELECTRICITY OMBUDSMAN

**(a) Petition No. 74 of 2009 filed by Thiru. Thedachelvam,Theni**

In his **order dated 28-1-2010** in the matter of prayer for reconnection of disconnected agricultural service connection, Ombudsman held that the appellant's case as one of genuine and directed TNEB to effect supply after recovering charges applicable to new connection and past arrears.

**(b) Petition No. 71 of 2009 filed by Thiru. Sukkeri, Villupuram**

The grievance of the petitioner was settled after the first hearing was held in this matter and even before the conclusion of the final hearing. The matter relates to **effecting of agricultural service connection**.

**(c) Petitions for refund of Electricity Tax**

In a batch of petitions which was filed for refund of **electricity tax** collected under the repealed enactment of **Tamil Nadu Electricity (Taxation on Consumption) Act 1962,** Ombudsman held in his order dated 31-3-2010 that such refund would go against the provisions of the **Tamil Nadu Tax on Consumption or Sale of Electricity Act, 2003**.

**(d) Non-compliance of the orders of the Ombudsman will attract penal provisions under Section142 and 146 of the Electricity Act. 2003-Ombudsman held.**

In a petition filed before the **Ombudsman** by the **Airport & Air Commissionerate, Chennai** praying for direction on the **order dated 31.10.2009** of the Consumer Grievance Redressal Forum, Chennai Electricity Distribution Circle (South) which rejected the plea of the appellant to reconsider the **cancellation of HT application** and **effect supply** to its premises, Ombudsman has directed TNEB to review the original application by collecting only the EMD and extend the HT supply as applied for on the grounds of **Force Majeure conditions** as stipulated in the **Regulation 31 (3) of the TN Electricity Distribution Code.**

Ombudsman has also pointed out that Non-compliance of the orders of the Ombudsman will attract penal provisions under **Sections 142 and 146 of the** Electricity Act, 2003.

நுகர்வோர் நல அலுவலகம்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம்,
19-ஏ, ருக்மணி லஷ்மிபதி சாலை, (டிட்கோ வளாகம்),
எழும்பூர், சென்னை - 600 008.
தொ.பே.எண். : +91-044-2841 1376 / 78 / 79
தொ. நகல் : 044-2841 1377
மின் அஞ்சல் : tnerc@vsnl.net / tnercmail@gmail.com
இணைய தளம் : www.tnerc.gov.in

To

Published by **Mr. R. BALASUBRAMANIAN,** Secretary, on behalf of **TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION** and published from No.19-A, Rukmini Lakshmipathy Salai (TIDCO Complex), Egmore, Chennai - 600 008 and printed by Thirumathi. **R. LEELA** at **M/s. R.S. GRAPHICS,** No.105, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034.

Editor : **Er. C. VEERAMANI, M.E., M.B.A.,** Deputy Director (Engineering), Tamil Nadu Electricity Regulatory Commission, Chennai - 600 008.